## தலைப்பு 211 – அரசாங்க அச்சகத் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க அச்சகத்திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க அச்சகத்திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அரசாங்க அச்சகத்திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து,நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்றும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,200 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மீளாய்வாண்டின் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரினால் திணைக்களத்திற்கு உரித்துக் கையளிக்கப்பட்டிருந்த கொழும்பு 08 இல் அமைந்துள்ள காணியின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்தக் காணியை மதிப்பிட்டு அரச அச்சீட்டுத் திணைக்களத்தின் சொத்தொன்றாக பதிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இந்தக் காணியை சொத்தொன்றாக கணக்கு வைப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச நிதி பணிப்பாளரின் 2021 செப்தெம்பர் 21 ஆந் திகதிய PED/RED/WO/2021/30 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய வருடங்களில் ரூபா 81,019,843 பெறுமதியான நிலுவை வருமான மீதிகள் பின்தொடரப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் எந்தத் தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எம்மால் அதற்குரிய நிறுவனங்களிடமிருந்து அந்த நிலுவை மீதியை செலுத்துமாறு கடிதங்கள் அனுப்பி குறித்த நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு துரிதமான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2010 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 183,394,346 ஆன நிலுவை வருமானத்திலிருந்து 14 சதவீதம் அல்லது ரூபா 25,180,698 மாத்திரம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய நிலுவை வருமானத்தின் ரூபா 25,180,698 மாத்திரம் அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையை பெற்றுத்தருமாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் குறித்த நிறுவனங்களுக்கு நினைவுறுத்தல் கடிதங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய 2022 மே 19 ஆந் திகதியில் உள்ளபடியாக தொடர்ந்தும் ரூபா 2,665,486 தொகை சேகரிக்க இயலுமானதாகி இருந்தது. | இந்த நிலுவைப் பணத்தை துரிதமாக அறவிடுவதற்கு வேலைத்திட்ட மொன்று ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 13 அரச நிறுவனங்களின் கடன் மீதிகள் ரூபா 106,582,048 ஆன போதிலும் அந்நிறுவனங்களிலிருந்து கிடைத்த மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் மீதியானது ரூபா 58,638,104 ஆனமையால் ரூபா 47,943,944 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | திணைக்களத்தின் கணக்குப் புத்தகங்களின் பிரகாரம் 11 நிறுவனங்களின் மீதிகள் ரூபா 40,971,314 எனவும் அந்நிறுவனங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்டுள்ள மீதி ரூபா 15,105,332 என்பதும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் குறிப்பிடபப்பட்டுள்ள நிறுவனங்களிடையே பெயரளவில் குறிப்பிடப்பட்டுள்ள 4 நிறுவனங்களில் ஒரு நிறுவனத்திற்கு அரச அச்சீட்டு கூட்டுத்தாபனத்தினால் அவர்களின் மீதி எமக்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி மீதிகளை தீர்ப்பனவு செய்ய வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2017 நவம்பர் 07 ஆந் திகதிய 22/99 (XXXIII) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 1.3 ஆம் பந்தி | போக்குவரத்து செய்யும் இரு முடிவிடங்களுக் கிடையே 50 கிலோமீற்றரை விஞ்சும் 06 பிரயாண தடவைகளுக்காக உத்தியோகத்தர்களின் போக்குவரத்திற்கு திணைக்களத்தின் வாகனத்தை ஈடுபடுத்தி 20,453 கிலோமீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை 4 மாத ஓட்ட குறிப்புக்களை பரிசோதித்த போது வெளிப்படுத்தப்பட்டது. | இது தொடர்பில் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் விசேட அங்கீகாரம் மற்றும் ஆலோசனை பெற்றுக் கொள்ள முன்வைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கடிதாசி கொள்வனவுக்குரிய கடதாசி இருப்பானது அகற்றப்படும் போது நான்கு சந்தர்ப்பங்களில் ரூபா 519,671 ஆன தாமதக் கட்டணம் மற்றும் தண்டப் பணத்தை செலுத்த நேர்ந்திருந்தது. | திறைசேரியிலிருந்து பணம் கிடைப்பது தாமதமடைந்தமையால் பொருட்களை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டமையால் இந்நிலைமை ஏற்பட்டது. | பெறுகை நடவடிக்கைகள் உரிய திட்டமிடலுடன் மேற்கொள்வதன் மூலம் தாமதக் கட்டணங்கள் மற்றும் தண்டப் பணங்களை செலுத்து வதிலிருந்து தவிர்த்துக் கொள்ள முடியும். |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(அ) பிரிவின் பிரகாரம் ரூபா 500,000 பெறுமதியை விஞ்சும் பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவின் போது எழுத்துமூல உடன்படிக்கையை கைச்சாத்திட்டு முன்னெடுக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பெறுகை நடவடிக்கைகளில் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் கட்டாயமாக மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(அ) பிரிவின் பிரகாரம் நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | எதிர்காலத்தில் மிகவும் வினைத்திறனுடைய போட்டி அடிப்படையிலான விலைக் கேள்விகளை சமர்ப்பிக்குமாறு விலைக்கேள்வியாளர் களுக்கு அறிவிப்பதற்கும் முறைப்பாடுகளை குறைத்துக் கொள்வதற்கும் நேர்மை மற்றும் வெளிப்படைத் தன்மை தொடர்பிலான கொள்கை மற்றும் நடைமுறையை காண்பிப்பதற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.8 ஆம் பந்தியின் பிரகாரம் தோல்வியடைந்த விலைக்கேள்வியாளர்களின் குறைபாடுகளை பொழிப்பாக்கி காண்பிப்பதற்கு பெறுகையின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த தரப்பினர்களின் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது அவ்விடயம் வழங்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.8 பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1964 இன் 28 ஆம் இலக்க காணிகளை சுவீகரிக்கும் அதிகாரச்சட்டத்தின் 460 ஆம் அத்தியாயத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் கதிர்காமம் பிரதேச செயலகம் அச்சீட்டு திணைக்களத்திற்கு 2003 சனவரி 31 ஆந் திகதி ஒப்படைத்திருந்த 0.105 ஹெக்டயர்கள் பரப்பளவான காணி அரச அச்சக கூட்டுறவு பொருளாதார மற்றும் கடன் வழங்கும் சங்கத்திற்கு குத்தகைக் காலம் நிறைவடைந்ததன் பின்னரும் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்தது. | 2004.12.01 ஆந் திகதி முதல் 10 வருட காலத்திற்கு உரித்துறுதி இலக்கம் 311 இன் கீழ் அரச அச்சக அதிபதியினால் இந்தக் காணி சங்கத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. குத்தகை உடன்படிக்கை காலம் நிறைவடைந்திருந்த போதிலும் இதுவரையிலும் சங்கத்தினால் அரச அச்சக அதிபரின் முழுமையான கண்காணிப்பின் கீழ் இக்காணியில் சுற்றுலா விடுதியொன்றினை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்துக்களை தனியாருக்கு சாட்டுதல் செய்யக் கூடாது. |

| | | |
|---|---|---|
| (ஆ) 2003 ஆம் ஆண்டில் கதிர்காம பிரதேச செயலகத்தினால் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த 0.105 ஹெக்டயர்கள் பரப்பளவான கதிர்காமத்தில் அமைந்துள்ள காணி மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கதிர்காமத்தில் அமைந்துள்ள இக்காணியை மதிப்பீடு செய்து எதிர்காலத்தில் அரச அச்சீட்டு திணைக்களத்தின் சொத்தொன்றாக பதிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இக்காணி சொத்தொன்றாக கணக்கு வைக்கப்படும். |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1997 திசெம்பர் 16 ஆந் திகதிய அமைச்சரவை பத்திர இலக்கம் 97/5232/17/035 பிரகாரம் 1998 ஆம் ஆண்டு முதல் வணிக அச்சீட்டுபடி திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுவதுடன் ஒரு மாதத்தின் வணிக அச்சீட்டுக் கட்டளையின் பெறுமதி நிலையாக காணப்படுவதாக அடிப்படையாகக் கொண்ட தொகையான ரூபா 40 மில்லியனுக்கு வீதாசாரமாக வணிக அச்சீட்டுப்படி செலுத்தப்படுகின்றது. 1998 ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் நாட்டில் நிலவும் பணவீக்கம், அரச சேவையின் சம்பள அதிகரிப்புக்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு அந்த ரூபா 40 மில்லியனான அடிப்படைப் | அரச அச்சீட்டுத் திணைக்களத்தின் பதவியணிக்கு செலுத்தப்படும் படிகள் நடைமுறையை எளிதாக்குவதற்காக குழு அறிக்கை சம்பளங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் வணிக அச்சீட்டு படிகள் தொடர்பில் தொடர்ந்தும் திருத்தங்கள் மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | இதுவரையிலும் நாட்டில் நிலவும் பணவீக்கம், அரச சேவையின் சம்பள அதிகரிப்புக்கள் ஆகிய விடயங்களை கருத்தில் கொண்டு அந்த ரூபா 40 மில்லியன் தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வணிக அச்சீட்டு படியினை செலுத்துவதற்காக கிரய கணக்கீட்டு முறைமையை அறிமுகப்படுத்துதல், அச்சீட்டு பணிகளின் அச்சீட்டு விளைதிறனை அதிகரித்தல் மற்றும் இனங்காணப்பட்ட நிதியேற்பாடுகளுடனான செயற்திட்டமொன்றை உருவாக்குதல் அல்லது அதற்கு மாற்றுவழியாக முற்பணக் கணக்கொன்றை உருவாக்குதல் ஆகிய மூன்று நிபந்தனைகள் 1998 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | கிரய மதிப்பீடு மற்றும் மதிப்பீடு மற்றும் விலைப்பட்டியல் மென்பொருளை கொள்வனவு செய்வதற்கு முயற்சி எடுத்த போதிலும் எதிர்பார்த்த அமைப்புக் குறிப்பீடுகளுடன் இணங்காமையால் அது தோல்வியடைந்தது. உற்பத்தி வினைத்திறனை அதிகரிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முற்பண கணக்கினை ஆரம்பிப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | வணிக அச்சீட்டு படியினை செலுத்தும் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனைகள் துரிதமாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். அவ்வாறே அச்சீட்டு பணிகளின் கிரயப் படுத்தும் பணி கணக்காளர் ஒருவரின் கீழ் நியமிக்கப்பட வேண்டும். |
| (இ) | நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தின் ESJ/T/ALLOW/03/012 இலக்கமுடைய கடிதத்தின் மூலம் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை கருத்தில் கொண்டு பதவியணி படிகள் 2018 ஆம் ஆண்டு வரை மாத்திரம் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது பதவியணிக்கு செலுத்தப்பட்ட ரூபா 557,421,503 கூட்டுத்தொகையான துண்டுக்கூலி அடிப்படையிலான படிகளுக்காக எவ்வித அனுமதியும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | 2018 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | உரிய படிகளை செலுத்துவதற்காக நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஆ/8/3/706/969/21 ஆம் இலக்க மற்றும் 2008 திசெம்பர் 02 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் தற்போது ஊழியர் ஒருவர் பெற்றுக் கொள்ளும் சம்பளத்தில் 65 சதவீத படியானது 2018 ஆம் ஆண்டு வரையிலும் செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும் ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தில் 65 சதவீதத்தினை விஞ்சி 104 சதவீதம் முதல் 555 சதவீதம் வரையிலான பல்வேறு வகையிலான 19 வகைப்படிகள் செலுத்தப்படுகின்றமை திணைக்களத்தின் இரு பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது. மீளாய்வாண்டில் ரூபா 30,372,909 ஆன படி அந்த இரு பிரிவுகளுக்காக செலுத்தப்பட்டிருந்தது. | இதுவரையிலும் பல்வேறு பெயர்களின் அடிப்படையில் படிகள் அறிமுகப்படுத்தல் தடுக்கப்பட்டு பொதுவான நடைமுறையொன்று அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தின் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 1981 திசெம்பர் 16 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் திணைக்களத்தின் அவசர அச்சீட்டு பணிகளை துரிதப்படுத்துவதற்கு மேலதிக நேர படிகளுக்கான வேலை பகுதிகளின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளும் நடைமுறைக்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. அமைச்சரவை தீர்மானத்திற்கு 40 வருடங்கள் கடந்திருந்த போதிலும் துண்டுக்கூலி அடிப்படையில் படிகளை | இதுவரையிலும் சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் ஊக்குவிப்பு படிகளை செலுத்துவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் துண்டுக்கூலி தொகுதிக்கு படிகள் அல்லது மேலதிக நேரப் படிகள் அல்லது ஒரு படி மாத்திரம் பெற்றுக் கொள்ள இயலுமான வகையிலான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மேலதிக நேர படிகளுக்கு வேலைப் பகுதிகளின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளும் நடைமுறை யொன்றை துரிதமாக நிறுவ வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்த வேண்டிய வேலைப் பகுதிகள் மற்றும் படிகளுக்காக செலுத்த வேண்டிய வீதங்களை சரியாக இனங்காணாமை ஒரே பணிக்கு மேலதிக நேரம் மற்றும் துண்டுக்கூலி அடிப்படையில் இரு வகையிலான படிகளும் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | திணைக்களத்தின் ''மல்டி மீடியா'' பிரிவின் பதவியணிக்காக வருகை படிகளை செலுத்துவதற்காக மாதமொன்றிற்கு ஆகக்குறைந்தது 16 நாட்களுக்காக ஆகக்கூடியது 22 நாட்கள் பணிக்கு சமூகமளிக்க வேண்டிய போதிலும் 16 நாட்களை விட குறைவாக சேவைக்கு சமூகமளித்திருந்த பதவியணியின் அங்கத்தவர்களுக்கு ரூபா 243,811 கூட்டுத்தொகையான வருகைப் படிகள் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | கொவிட் நிலைமை காரணமாக ஊழியர்களை சேவைக்கு அழைப்பதில் வரையறைகள் காணப்பட்டமையால் இவ்வாறு சேவைக்கு அறிக்கையிடுவதில் நிலவிய கட்டுப்பாடுகளை கருத்திற் கொள்ளாது வருகைப் படிகள் செலுத்தப்பட்டுள்ளன. | இப்பிரிவின் ஊழியர்களுக்கு இதற்கு மேலதிகமாக மேலும் பல படிகள் செலுத்தப்படுவதால் இப்படிகளை செலுத்தும் போது உரியதாக கொள்ளப்பட வேண்டிய நிபந்தனைகளை நிறைவேற்றி யிருப்பின் மாத்திரம் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும். |
| (எ) | ''மல்டி மீடியா'' பிரிவின் ஒரு உற்பத்தி இயந்திரத்தின் உற்பத்தி அங்கீகரிக்கப்பட்ட (Norm) குறைக்கப்படாது மொத்த உற்பத்தியின் அடிப்படையில் கொடுப்பனவு செலுத்தப்பட்டதால் அப்பிரிவின் பதவியணிக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 325,602 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | கணிப்பீட்டு வழுவொன்றின் காரணமாக இவ்வாறு கூடுதலான தொகை செலுத்தப்பட்டுள்ளது. | இப்படிகளை செலுத்தும் போது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றியிருப்பின் படிகள் செலுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஏ) 05 வருடங்கள் முதல் 24 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முதல் நிலவும் ஓய்வுபெற்ற மூன்று உத்தியோகத்தர்களின், பணி நீக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின், சேவையை கைவிட்டுச் சென்ற 18 உத்தியோகத்தர்களின் மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் சேவையை விட்டு அகன்றுள்ள 04 உத்தியோகத்தர்களின் ரூபா 3,108,952 ஆன கடன் மீதியை தீர்ப்பனவு செய்ய தவறியிருந்தது. | கடனை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளன. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிரந்தர அடிப்படையில் மற்றும் பதிற்கடமை அடிப்படையில் உதவி அச்சக அதிபர்களை நியமித்துள்ள 10 பிரிவுகளுக்காக விசேட காரணங்களை குறிப்பிடாது பணியின் மூத்தோரை பணி மேவுகை அடிப்படையில் அப்பிரிவுகளில் உதவி அரச அச்சக அதிபர்களாக நியமித்து மீளாய்வாண்டின் போது ரூபா 714,225 தொகை பதிற் கடமை படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | அச்சீட்டு பணிகளை மிகவும் செயற்திறனாக பேணுவதற்கு இவ்வாறான பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் அடிப்படையில் பதவிக்குரிய அடிப்படை சம்பளத்தில் ¼ பதிற்கடமை படிகளாக செலுத்தப்பட்டுள்ளது. | இவ்வாறான முறையற்ற நியமனங்கள் வழங்கப்படக் கூடாது. |